விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 2 ஷவ்வா 7 இதழ் 125

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16-6-1986

PERIODICAL DIV. LIBRARY

## உலகஇளைஞர்-மாணவர் ஒன்றியத்தின் 'தமிழீழத்தவருடனான ஒருமைப்பாட்டு வாரம்!'

### சென்னையில் மாநாடு

(சென்னை)

இலங்கைத் தமிழ் மக்களுடனும் மாணவர்களுடனுமான ஒருமைப்பாட்டினை உலகினுக்கு எடுத்துக்காட்டும் வகையில் சர்வதேசமாணவர் மாநாடென்றினை நடாத்த உலக இளைஞர் மாணவர் பொது ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

சென்னை சேப்பாக்கத்திலுள்ள உலக பல்கலைக்கழக சேவை நிலையத்தில் மேற்படி மாநாடு நடைபெறவுள்ளத்.

'தமிழீழத்தவருடனான ஒருமைப்பாடு வாரம்' என்ற தலைப்பின்கீழ் நடைபெறும் மேற்படி மாநாடு ஜுன் 28ம் திகதி முதல் ஜுலை 4ம் திகதி வரை நடைபெறும். (ஷ)

● கடல் நீரேரித் தடைச் சட்டம்

# யாழ். குடாநாட்டில் 35 ஆயிரம் மீனவ குடும்பங்கள் பாதிப்பு!

## கடற்றொழில் பூரண ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடல்நீர் ஏரிகளில் கடற்றொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து, வடபகுதியைச் சேர்ந்த சுமார் 35 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. ஸ்ரீலங்காவுக்குக் கிடைத்துவந்த அந்நியச் செலாவணியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த 12-ம் திகதி முதல் நீரேரிகளில் கடற்றொழில் புரி யாழ்ப்பாணக் குடாநாட்டைச் [illegible] வடபகுதி பாதுகாப் சூழவுள்ள, மற்றும் குடாநாட் புப்படை வட்டாரங்கள் தடை டிற்குள் அமைந்துள்ள கடல் விதித்துள்ளன. பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்தே இத்தடை போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி முதல் கடல்கண்காணிப்புச் சட்டத்திலிருந்து விதி

[6ம் பக்கம் பார்க்க]

கடல்நீர்ஏரித் தடைச் சட்டம்:

## அராலித்துறை பயணத்துக்கு தடை இல்லை!

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதிகளுக்கு அராலித் துறையூடாக பொது மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள எந்தவித தடையும் இருக்காதென இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள் யாழ் அரசாங்க அதிபருக்கு உறுதி அளித்துள்ளனர்.

இம்மாதம் 12 ம் திகதிமுதல்

[6-ம் பக்கம் பார்க்க]

## 20, 21ம் திகதிகளில்மீண்டும் அடகுநகை விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமில் கடந்த மாதம் நகை விநியோகத்தின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தமது சங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த வல்வெட்டித்துறை, யாழ். பிரதான வீதி மக்கள் வங்கிக்கிளைகளின் அடவுநகை விநியோகம் இம்மாதம் 20-ம், 21ம் திகதிகளில் பலாலி இராணுவ முகாமில் வைத்து மீண்டும் விநியோகிக்கப்படும் என்று அடகுவைத்தோர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 6-ம் திகதி பலாலி முகாமில் வைத்து மேற்குறிப்பிட்ட இரு மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகள் அடகுவைத்தோர் தங்கள் நகைகளை மீளப்பெறச் சென்றபோது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானதும் இருவர் பலியானதும், மூவர் காய

[6ம் பக்கம் பார்க்க]

இலங்கை ஆலோசனைகள்

## இந்தியாவுக்கு விளக்கங்கள் அனுப்பப்பட்டுவிட்டன - லலித்

[கொழும்பு]

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண இலங்கையினால் கடைசியாக சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இந்தியா கோரியிருந்த விளக்கங்கள், இலங்கையினால் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பத்திரிகையாளரைச் சந்தித்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

நேற்றுமுன்திைமே இவ் விளக்கங்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்த அவர் விளக்கங்கள் எத்தகையதெனக் கூறமறுத்து விட்டார். இவை ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன எனக் கூறினார். [செ]

கிளிநொச்சி ——

## ஆஸ்பத்திரி, பாடசாலைகள் மீது விமானக் குண்டு வீச்சு

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இரத்தினபுரம், திருவையாறு, ஜெயந்திநகர், கனகபுரம், கிளிநொச்சி நகர் முதலான இடங்கள்மீது மீண்டும் விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றதால் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியின் சில பகுதிகளும் பாடசாலைகளும் மற்றும் சில கட்டிடங்களும் சேதத்திற்குள்ளாகின.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிமீது விழுந்த குண்டால் ஆஸ்பத்திரி

[6ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் இரு வர்த்தகர் வீடுகளில் கொள்ளை

(வவனியா)

கடந்த புதன் இரவு வவனியாவில் இரு வர்த்தகர்களின் வீடுகளில் கொள்ளை இடம் பெற்றுள்ளது என அறிவிக்கபடுகின்றது.

வெளிக்குளம், மகா இறம்பைக்குளத்திலேயே இக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன

முகமூடிதரித்த ஆயுதபாணிகளே இக்கொள்ளைகளை நடத்தியுள்ளார்கள்.

வர்த்தகரான மேற்படி இருவரது வீட்டிலும் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவில்

## மேற்படிப்பைத் தொடர விரும்புகிறவர்க்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் பட்ட மேற்படிப்பை 1987/88ம் ஆண்டில் தொடரவிரும்பும் இலங்கையர்களுக்கு ''புல்பிரைத்-ஹேஸ் கல்வி பரிமாற்று புலமைப்பரிசு'' வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க இலங்கையிலுள்ள அமெரிக்க கல்வி பவுண்டேஷன் அமைப்பு முன்வந்துள்ளது.

முதலாம், இரண்டாம் உயர் மட்டப்பிரிவுகளில் நான்கு வருட இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் முதுகலை (MA/MS) பட்டங்களுக்கான கல்வியைத் தொடர்வதற்கு இந்தப் பரிசில் கிடைக்கும்.

சமூகவியல் விஞ்ஞானமும் மனிதவியலும், பௌதிகவிஞ்ஞானம், உயிரியல், கட்டிடவியல், பொறியியல், வர்த்தகவியல், முகாமைத்துவ நெறிகளில் இவர்கள் தம் கல்வியைத் தொடரலாம்.

1986 அக்டோபர் முதலாம் திகதியன்று 35 வயதுக்குட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டிய இப் புலமைப் பரிசிலைப் பெற விரும்பும் இலங்கையர் எவரும் பின்வரும் முகவரிக்கு மனுச்செய்து விண்ணப்பபடிவங்களை பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். ஜுலை 8ம் திகதிக்குமுன் விண்

(6ம் பக்கம் பார்க்க)

## 10 மணிநேர ஊரடங்கு

[கொழும்பு]

திருகோணமலை நிர்வாக மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்று [15-6-86] பத்து மணிநேர ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை நிர்வாக மாவட்டத்திலும், கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்திலும் நேற்றிரவு 7 மணி தொடக்கம் இன்று காலை 5 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது. [வா]

மகிழ்ச்சிகரமான செய்தி

இடமாற்றம்

லெயிடன் காமன்ஸ் ஸ்தாபனம் தங்கள் சேவையை தற்காலிகமாக 95 (235) ஆஸ்பத்திரி ரோட் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாற்றம் செய்திருக்கிறார்கள். சேவைகள் வழமை போல் நடைபெறுகின்றன.

மனேஜர்,
லெயிடன் காமன்ஸ்,
யாழ்ப்பாணம்.

C 2904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 அறைகள் கொண்ட வீட்டுடன் 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.I.Watson, Ark Lane, Uduvil. C-2897

எமது சைவப்பிரகாச அச்சுயந்திரசாலைக் கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட கதவு, யன்னல், ஓடு, தகரம், மரம் ஆகியனவும், அச்சகசேஸ், தளபாடங்கள் விற்பனைக்குண்டு. வண்ணார்பண்ணை கல்லூரிவீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வேலை நாட்களில் காலை 9-00—12-00 மணிவரை இவற்றைப் பார்வையிடலாம். தங்கள் விலை மதிப்பீட்டை எழுத்துமூலம் செயலாளர், சைவபரிபாலன சபை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வழங்குக. A-841

லவ் பேட்ஸ் பறவைக்குரிய முக்கிய சாப்பாடு சாமை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு: கந்தசாமி அன் சன்ஸ், நல்லூர் மார்கட், கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு. C-2866

சிறுப்பிட்டி மேற்கு இராஜ வீதியில் 6 பரப்புக்காணி [நிலாவரைக்கு அண்மையில்] விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: வே. திருப்பரங்குன்றம், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. [C 2878]

சங்குவேலியில் பழைய உபதபாற் கந்தோருக்கு முன்பாக 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: உப-அஞ்சல் அதிபர், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். [C 2891]

Bairaha Farms புறொயிலர் குஞ்சு விநியோக திகதி யூன் 27க்கும் Shetna Farm பிறவுண் பேட்டுக்குஞ்சு விநியோக திகதி யூலை முதல் வாரத்திற்கும் பின்போடப்பட்டுள்ளதை முற்பணம் செலுத்தியவர்களுக்கு அறியத்தருகிறோம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 2896]

உயர்தர இந்தியா கோரோசனை, கஸ்தூரி, புனுகு, சந்தனத்தைலம், ஸ்பெயின் குங்குமப்பூ மற்றும் தற்கால சிகிச்சா கிரமத்திற்குப் பயனுள்ள புதிய சித்த ஆயுர்வேத மருந்துவகைகளும் விபரங்களுடன் வைத்தியர்கள் பெற்றுக்கொள்ளலாம். Dr. R. மங்களாம்பிகை D.A.M. மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C-2571]

### தேவை

சாயம் பதனிடும் வேலை பயிலுநர் பதவிக்கு க. பொ. த. (உயர்தரம்) இரசாயனவியல் சித்தியடைந்தவர்களும் வேறு உயர் தராதரம், அனுபவம் உடையவர்களும் சான்றிதழ்களுடன் 18.6.86 காலை 10.00மணிக்கு நேரில் சமுகங்கொடுக்கவும்.

உற்பத்தி முகாமையாளர்,
**வல்லை நூற்றல் நெய்தல்ஆலை,**
**உடுப்பிட்டி,**
**வல்வெட்டித்துறை.**
(A-844)

### பயிற்சி

றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், ComputerProgramming, எலக்ரிக்கல் வயரிங், றிவைன்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப்பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும். சனி, ஞாயிறு கிழமை நாட்கள் காலை மாலை நேர பயிற்சிவகுப்புக்கள் நடைபெறுகின்றன. மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 20-06-86. விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி வீதி, [றெயில் வேகடவை அருகாமை], யாழ்ப்பாணம். C-2901

### காணவில்லை

வவனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி வயது 9 என்பவர் 12-6-86 முதல் 99/7, பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து காணமல் போய்விட்டார். அவரைக்கண்டால் தயவுசெய்து வன்னியசிங்கம் 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு உடன் தொடர்புகொள்ளவும். C-2895

### தேவை

பாவித்த வீட்டுப்பாவனைப் பொருட்கள் தளபாடங்கள் எலக்ரிக்பொருட்கள் றேடியோ முதலியன உடன் தேவை. M. Thiagarajaa, 125, Main Street, Jaffna. C-2890

### ஆயுகள்

றேடியோ and ரீ.வி. (டெக்) வயறிங், வெல்டிங், மோட்டார்மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-2786

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அச்சுவேலி நமசிவாயம் இளையதம்பி என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல.ரி/183

இளையதம்பி நந்தகுமார்- அச்சுவேலி.

மனுதார்

1. இளையதம்பி கைம்பெண் மிதிலேஸ்வரி.
2. இளையதம்பி தியாகராசா
3. இளையதம்பி ஞானபாலன்

எல்லோரும் அச்சுவேலி வடக்கு.

எதிர் மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு ஆனி மாதம் 18-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்.**
பதிவாளர்.

வரைவு
**க. வ. பாலசிங்கம்**
மனுதாரின்
சட்டத்தரணி,
அச்சுவேலி. C 2870

## "யூ. என். பி. அரசிடம் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது"

[யாழ்ப்பாணம்]

"இன மத பேதமற்று சகல பகுதிமக்களினதும் நலனையும் பிரதிபலித்து சேவை செய்த காரணத்தினாலேயே அமரர் சரத் முத்தெட்டுவேகமவின் இழப்பிற்கு சகல மக்களும் அஞ்சலி செலுத்துகின்றனர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையுமே சரத் செயல்படுத்தினார். ஆகவே அவரைக் கம்யூனிஸ்ட் கட்சியினின்றும் ஒருபொழுதும் பிரித்துக் காட்டமுடியாது."

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு பொன். குமாரசுவாமி கூறினார்.

அகால மரணமடைந்த கலவானைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டு வேகமவின் அஞ்சலிக் கூட்டம் நீர்வேலியில் திருமதி. வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெற்றது இக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசியதா

(5ட் பக்கம் பார்க்க)

## முதலாண்டு நினைவஞ்சலி



வங்கம் செலுத்தி
வளங்கண்ட
தங்கமணிக்கரத்தோன்

**திரு. யோசேப் முத்தையா**
(Managing Director
Smipt Shipping and
Trading Pte. Ltd.)

தோற்றம்: 11-02-1931

மறைவு: 16-06-1985

அன்பின் திருவுருவே, ஆக்கத்தின் பெட்டகமே இன்ப மணிக்கரத்தால், ஈந்தின்பங் கண்டவரே உந்தன் திருக்கோலம், ஊன்றி உளத்திருக்க என்றும் நின்மக்கள், ஏந்திழையாள் தனித்திருக்க ஒவ்வோர் கணப்பொழுதும், ஓங்கிநிற்கும் நின்னுருவே ஒளடதமாய் வாழ்ந்த உமை, மறவோமே மாநிலத்தில்.

அன்புள்ள
இராசேஸ்வரி (மனைவி)
ரவீந்திரன்
பொறியியவாளர்
(U. K.),
தமயந்தி
(கணக்கியல் மாணவி).
(C 2770)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றிமரணமெய்திய கிளிநொச்சி வில்சன் றோட் 1-ம்குறுக்குத்தெரு இல 10 தைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை சீனிவாசகம் கந்தசாமி என்பவரின் மரணச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழ. இல. தத்துவம்/3972

சபாபதிப்பிள்ளை சீனிவாசகம் கந்தசாமி கைம்பெண் அன்னபூரணம், இல. 10, முதலாம் குறுக்குத்தெரு, வில்சன் றோட்டு, கிளிநொச்சி.

மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

வரைந்தது:
த. சோமசுந்தரம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 2871)

## வீடு/காணி விற்பனவு

1. யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையாக மூன்று அறைகளுடன் ஒரு புதிய வீடு.
2. யாழ்ப்பாணம் கச்சேரி கண்டி வீதிக்கு அண்மையாக 4 பரப்புக்காணி. பிரித்தும் கொடுக்கப்படும்.

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்துக்கு 20% வட்டி கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

J. P. T. Ltd,
3, நவீன சந்தை [மேல் மாடி,
யாழ்ப்பாணம். [A-733]

---

✯ சுவீடன் ✯ டென்மார்க்

செல்ல விரும்புபவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மற்றும்

✯ பிரான்ஸ் ✯ இத்தாலி
✯ ஜேர்மனி ✯ சுவிஸ்

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி உங்களை வெகுவிரைவில் அழைத்துச்செல்வார்.

அத்துடன், அவுஸ்திரேலியாவிற்கு விசா எடுத்தும் கனடா செல்வதற்கு பிரயாண ஒழுங்குகள் செய்தும் கொடுக்கப்படும்.

பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**லிப்ருஸ் லிமிற்ரெட்**

R. G. கட்டடம்,
இல.70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

2 nd Floor, York Building,
No: 94 1/7, York Street,
Colombo — 1
Tel. No: 25508

[A-731]

---

## பிரயாண ஒழுங்குகள்

✯ கனடா ✯ ஜேர்மனி
✯ பிரான்ஸ் ✯ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் இம்மாதம் 25ந் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தொண்டிலும் சிறந்த ஒன்று இருக்கிறதா?
எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. தொண்டே
எனது வாழ்க்கை; எனது செல்வம்;
எனது ஆருயிர்; எனது சமயம் எல்லாம்.

— திரு. வி. க.

# நமது நோக்கு

## இந்தியாவை புறக்கணிப்பது எவருக்கும் உதவாது

தமிழர் பிரச்னைக்குத் தீர்வொன்றினைக் காண்பதில் இதுவரை காலமும் இலங்கை அரசாங்கம் தன் முனைப்பாகவோ இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தியோ இன்னும் சொல்வதானால், இஸ்ரேலின் 'மொஸாட்' பிரிட்டிஷ் கூலிப்படை நிறுவனங்களின் ஆலோசனைகளைக் கொண்டோ எதுவித முன்னேற்றத்தையும் காணவில்லை என்பது கண்கூடு.

பொதுவில், சுதந்திரம் கிடைத்ததிலிருந்து மாறி மாறிப் பதவியிலிருந்த அரசாங்கக் கட்சிகளே தமிழர் பிரச்னை முகிழ்த்தெழுவதற்குக் காரணமாக விருந்தன இப்போது அதனைத் தீர்த்துவைப்பதிலும் அதே கட்சிகள் 'மல்லு'க்கு நிற்கின்றன.

1983ம் ஆண்டு இனக் கலவரத்துடன் இப்பிரச்னையில் சுமுகமான தீர்வுக்கு வழி ஏற்படுமென்றே நம்பப்பட்டது. அந்தவகையில் இந்தியாவின் நல்லெண்ண முயற்சியும் வரவேற்கப்பட்டது. இப்பொழுது என்னவெனில் தமிழர் பிரச்னைத் தீர்வுக்கு இந்தியாவே முட்டுக்கட்டையாக இருப்பது போன்று ஒரு கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

ஏற்கனவே இந்திய முயற்சியின் பேரில் உருவாக்கப்பட்ட சர்வகட்சி மகாநாடு தோல்வியுற்றது பழையவிடயம். இப்போது இலங்கை அரசு தன்முனைப்பாக அங்கீகரிக்கப்பட்ட சகல கட்சிகளையும் இம்மாதம் 25ம் திகதி ஒரு மகாநாட்டுக்கு அழைத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பாலும் கலந்து கொள்வது நம்பிக்கையில்லை. முன்னைய சர்வகட்சி மாநாட்டையும இக்கட்சி பகிஷ்காத்துவிட்டது தெரிந்ததே.

இந்த மாநாட்டுக்குவரும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியும் அழைக்கப்படலாமென்று கூறப்பட்டபோதிலும் இவ்விடயத்தில் இந்தியாவின் அனுசரணையின்றி தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்துகொள்ளும் என்று கருதமுடியாது.

1983ம் ஆண்டுக்கலவாத்தையடுத்து இங்கு தங்கியிருப்பது புத்தியில்லையென்று எண்ட பலதமிழர்களும் தமிழ்த்தலைவர்களும் பிறநாடுகளுக்கு சென்றார்கள். தமிழ்நாட்டுக்கு சென்ற தமிழ்த் தலைவர்கள் இந்திய அரசின் உதவியைக் கோரினார்கள். சிங்கள-தமிழ் உணர்ச்சிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மையால் மத்தியஸ்தம் செய்துவைக்கும்படி இலங்கை அரசாலும் இந்தியா அழைக்கப்பட்டது. அதிலிருந்தே இந்திய மக்களும் இந்திய தலைவர்களும் இவ்விடயத்தில் அதிகஅக்கறைகொண்டு வருகிறார்கள்.

இந்திய மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை அரசு தன் போக்கில் தமிழ் பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இப்பொழுது அரசு எடுக்கும் முயற்சியின் நோக்கம் இலங்கையின் சகல கட்சிகளையும் தனது ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு வற்புறுத்துவதே என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இந்த முயற்சியில் வெற்றி பெற்று விட்டால், இந்தியாவை முற்றாகவே புறக்கணித்து விட முடியும். முழு நாடும் இங்கு நடக்கும் ''பயங்கரவாத'' எதிர்ப்பு நடவடிக்கையை ஆதரிக்கிறது என உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்து இராணுவ உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்என அரசு கருதுவதாகக் கூறலாம்.

எவ்வாறாயினும் இந்திய அரசின் நலலெண்ண முயற்சிகளைப் புறக்கணிப்பதாயின் அது தமிழர்களுக்கு மட்டுமல்ல நாடு முழுவதுக்குமே நல்லதாய் முடியாது என்பதே எம் கருத்து.

அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்காவிட்டாலும் இந்தியாவின் சர்வதேச செல்வாக்கினை இங்குள்ளவர்கள் மிகக் குறைவாக மதிப்பிட்டுவிடக் கூடாது.

## மயிலியற் புலத்தில் மயிலேறி வருமுருகா!

அன்பர்க் கருள அணிமயிலி யற்புலம்வாழ்
இன்ப நிதியே இறையோனே- என்பெருந்தாய்
அம்பிகையாள் பாலா அருள்வேற் கரமுருகா
நம்பினேன் பொற்பாதந் நின்.

பாதம் பணியுந் நெறியறியாது பரதவிக்கு
மேதந்தவிர்ப்பாய் பொழிலார் மயிலை
எழிற்புலத்தே
சோதிச்சுடர்வே லொளிர மயிலே சுமந்துவரும்
ஆதிப்பொருளே அடியேனுன் பாதம் அடைக்கலமே

இனியாகிலுமென் வினையது நீக்கி யிடர்களையக்
கனியேமயிலைப் புலந்தனில் வாழ்கரு ணைக்கடலே
தனியேகிடந்து தளர்வறு வேற்குநின் தாளருள
நினையா திருந்திடின் யார்துணை
யேநெடுவேற்குகனே

கி. நெல்லிநாதன்.

[நேற்று அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம்]

# "ஸாம்பியா தாக்கப்பட்டால் பதில் தாக்குதல் நடக்கும்!

## தென்னாபிரிக்காவுக்கு கவுண்டா எச்சரிக்கை

லண்டன், ஜூன் 15

'ஸாம்பியா மீது தென்னாபிரிக்கா தாக்குதல் நடத்துமாகில் அதனை எதிர்த்து முறியடிக்கும் வகையில் பதில் தாக்குதல் நடத்தப்படும்'' என்று ஸாம்பியாவின் அதிபர் திரு. கென்னத் கவுண்டா எச்சரிக்கை யொன்றினைவிடுத்துள்ளார்.

தமது நாட்டுப் படையினர் மத்தியில் பேசும்போது தென்னாபிரிக்காவுக்கான இந்த எச்சரிக்கையை விடுத்த அதிபர் கவுண்டா தென்னாபிரிக்காவின் எதிர்ப்பினை சமாளிக்கும்வகையில் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று படையினருக்கு வேண்டுகோள் ஒன்றும் விடுத்துள்ளார்.

தமது நாட்டின் வடக்குப் பகுதிகளை தாக்குவதற்கு இனவெறி பிறிட்டோரியா அரசு திட்டமிட்டுள்ளதாக குற்றம் சாட்டிய அதிபர் கவுண்டா அண்மையில் ஸாம்பியாவில் உளவுபார்த்ததாக கைதுசெய்யப்பட்ட ஒன்பது வெள்ளையர்களில் ஒருவர் இத் தகவலைத் தெரிவித்ததாகவும் கூறினார்.

பிறிட்டோரியா அரசுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்காவிட்டால் ஸாம்பியா காமன்வெல்த் அமைப்பில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாகவும் அதிபர் கென்னத் கவுண்டா எச்சரிக்கை விடுத்துள்ளார். (ரா)

## தென்னாபிரிக்காவில் குண்டுவெடிப்பு: 2 பேர் பலி; 15 பேர் காயம்

பிரிட்டோரியா, ஜூன் 15

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இரண்டு பெண்கள் பலியாகியுள்ளனர். பதினைந்துபேர் பலத்த காயமடைந்துள்ளனர்,

டர்பன் நகருக்கருகில் வெள்ளையர் நெருக்கமாக வாழும் பகுதியிலேயே இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

உணவு விடுதி ஒன்றுக்கு வெளியில் நடந்த இந்தக்கார்க் குண்டுவெடிப்பினால் அந்த விடுதியின் கூரை முற்றாக இடிந்துவிட்டதாக தென்னாபிரிக்க செய்தி நிறுவனமான ''நியூஸ்பீரோ'' அறிவித்துள்ளது. சம்பவத்தைத் தொடர்ந்து டர்பன் நகரப் பகுதியை பொலிஸார்சுற்றிவளைத்துள்ளதுடன் பலத்த தேடுதலில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

செய்தி திரட்டுதல், வன்முறைச் சம்பவங்கள் ஆகியவற்றை தடுத்துநிறுத்தும் வகையில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட மூன்றாவது நாளில் இடம் பெற்ற சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

## லொறி விபத்தில் நால்வர் பலி

சென்னை. ஜூன் 15

இரண்டுலொறிகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன் தினம் சென்னைக்கருகில் இடம் பெற்றுள்ளது. இதில் மூன்று பேர் பலியானதுடன் ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதின் பின்பு மரணமடைந்துள்ளார். (ரா)

## இந்திய மீனவருக்கு துப்பாக்கிச்சூடு

சென்னை, ஜூன் 15

இந்திய மீனவர் ஒருவர் கச்சதீவுக்கருகில இலங்கை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்தவர் இராமநாதபுரம் வைத்தியமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ரா)

## சோவியத்அதிபர்கொர்பச்சேவ் இந்தியா விஜயம்

மாஸ்கோ, ஜூன் 15

சோவியத் தலைவர் திரு. மிகெல் கொர்பச்சேவ் இவ்வாண்டு அக்டோபர் அல்லது நவம்பர் மாதமளவில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

தற்பொழுது மாஸ்கோ சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர் சோவியத் தலைவர் திரு. மிகெல்கொர்பச்சேவைக் கிரெம்ளினில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்பின்பே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரண்டுமணிநேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது சோவியத் வெளியுறவு அமைச்சரும் உடன் இருந்தார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக இரு நாடுகளும் இச் சந்திப்பின்போது கண்டனம் தெரிவித்ததுடன் ''சர்வதேசபயங்கரவாதம் எந்த அடிப்படையில் பயன்படுத்தப்பட்டாலும் அதனை அனுமதிக்கமுடியாது'' என்றும் கூறியுள்ளன.

சர்வதேச நிலைமை, ஆயுதக் குறைப்பு, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதிகளவில் ஆயுதம் வழங்கல் போன்ற பலதரப்பட்ட விவகாரங்களும் இச் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது

## வளைகுடாவில் தொடரும் அமைதி நிலைமை

பெய்ரூட், ஜூன்-15

பாலஸ்தீன தேசிய விடுதலைப் படையினருக்கும் ஸியா அமல் மக்கள் படையினருக்கு மிடையில் அமுல்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டினைத் தொடர்ந்து வளைகுடாப் பகுதியில் அமைதி நிலவிவருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்கு பெய்ரூட்டில் பாலஸ்தீன அகதிமுகாம் பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த கடும் போரைத் தொடர்ந்து அங்கு போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஸியா அமல் மக்கள் படை, பாலஸ்தீனிய தேசிய விடுதலை முன்னணி, சிரியாவின் துணை அதிபர் அப்துல் ஹலீம் கதம் ஆகியோருக்கிடையில் டமஸ்கஸில் இந்தப் போர் நிறுத்த உடன்பாடு அமுல்படுத்தப்பட்டது. [ரா]

## பாகிஸ்தானில் நாடுதழுவிய எதிர்ப்புக் கூட்டத்துக்கு பெனாஸிர் ஆயத்தம்

கராச்சி, ஜூன்-15

அடுத்த மாதம் 5ம் திகதி நாடுதழுவியரீதியில் மாபெரும் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தத் தயாராகும்படி பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவி செல்வி பெனாஸிர் பூட்டோ தமது கட்சி உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் புதிய தேர்தல் ஒன்றினை நடத்த அரசை நிர்ப்பந்திக்கும் வகையிலேயே இந்த எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கூறிய செல்வி பெனாஸிர், ''சென்ற ஆண்டு பெப்ரவரி மாதம் எந்தவிதமான கட்சிப் பங்கேற்பும் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய பேரவை உடனடியாகக் கலைக்கப்படவேண்டும்'' என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எல்லா அரசியற்கட்சிகளும் பங்கேற்கும் வகையில் இந்தப் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் செல்வி பெனாஸிர் வலியுறுத்தியுள்ளார். [ரா]

## எரிபொருள் எடுத்துவர தனியாருக்கு அனுமதி

[வவனியா]

வவனியாவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு தனியார் வர்த்தகர் சிலருக்கு எரிபொருள் எடுத்து வருவதற்கு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோல், டீசல் பெற பாவனையாளர்கள் கச்சேரியிலுள்ள அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரிடமிருந்து பெமிட் பெறறுக் கொளள முடியும். மண்ணெண்ணை பெறுவதற்கு பெர்மிட் தேவையில்லை. [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே மறைந்தனையோ

இராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி

எங்கே மறைந்தனையோ ஏழைப்பங்காளனே சரத் -
முத்தெட்டுவேகம-எங்கே மறைந்தனையோ

நெஞ்சிலுர முடையாய் நேர்மைத் திறனுடையாய்
வஞ்சமனமுடையார் நெஞ்சில் மகிழ்வுகொள்ள- எங்கே

சொல்லாலும் செயலாலும் கொள்கையைக்
சடைப்பிடித்தாய்
பொல்லாத சந்தர்ப்ப வாதிகளைச் சாடிநீ - எங்கே

மறத்தமிழர் உரிமைக்கு மன்றினிலே வாதிட்டு
ஏறுபோல் கர்ச்சித்தாய் எதிரிகள் நடுங்கிடவே -எங்கே

நீதிக்குப் போரிட்டாய் நீசர் குழாம் முன்னே
சாதிச்சண்டாளருக்கு சாட்டையடி கொடுத்து- எங்கே

பிரதேசசுய ஆட்சி தமிழர்க்கு வேண்டுமென்று
இறுதிவரை போரிட்டு இறந்து நீமாண்டாயோ-எங்கே

இனமத பேதமில்லா ஈடில்லா தலைவனையா
மனம் மொழி மெய்களால் பிறன்கேடு சூழாதநீ-எங்கே

அரக்கரின் ஆட்சிதனில் அநியாயங்கள் மலிய
இறுக்கமாங் எடுத்துரைத்த ஏந்தலே சரத்தோழா
-எங்கே

- கரவை திருமறைக்காடன்

# 'இறந்த 30 கடற்றொழிலாளரில் 13 பேர் எனது உறவினர்கள்'

## மரண விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம்]

'பலியான 30 குருநகர் கடற்றொழிலாளர்களில் பதின்மூன்றுபேர் எனது உறவினர்கள்' என்று குருநகரைச் சேர்ந்த சியோன் நிக்கல் மரணவிசாரணையில் தெரிவித்தார்,

பலியான 30 குருநகர் கடற்றொழிலாளரின் மரணவிசாரணை யாழ் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் யாழ் பதில் நீதவான் கே. பி எஸ். வரதராசா முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆஜரானார்.

சியோன் நிக்கல் மேலும் கூறியதாவது; பலியானவர்கள் சம்பவதினம் அதிகாலை 4 மணிக்கு கரைவலை போட்டு மீன் பிடிக்க தீவுப்பகுதிக்கு புறப்பட்டார்கள். அனுமதியளிக்கப்பட்ட கடல் பகுதியில் தான் அவர்கள் கரைவலை போடச் சென்றார்கள்

சம்பவதினம் காலை 11 மணிக்கு நாங்கள் படகில் மீன் பிடிக்கச் சென்றோம். தீவுப் பகுதி கடற்கரையில், மாதா கோவிலுக்கு சமீபத்தில் காலையில் சென்ற படகு நின்றது. கிட்டப் போய்பார்த்தேம் படகில் சிலரின் சடலங்கள் கிடந்தன கடலிலும்சில சடலங்கள் கிடந்தன சடலங்களை படகில் ஏற்றிவந்து குருநகரில் ஒப்படைத்தோம். கிராம சேவகருக்கு அறிவித்தோம்.

பலியானவர்கள் கரைவலை போடச் சென்றனர். எத்தனை பேர் அப்படகில் ஏறவந்தாலும் அவர்களை ஏற்றிச் செல்வது வழக்கம். அனுமதியளிக்கப்பட்டபின் சுமார் இரண்டு மாதகாலம் அந்த இடத்திற்கு அவர்கள் கரைவலை போடச் சென்றுவந்தனர். அரக்கொட்டியான் வலைபோட நேரம் பிந்தி மத்தியானம் போகலாம். கரைவலைபோட அதிகாலையில் தான் போகவேண்டும்

குருநகரைச் சேர்ந்த செபமாலை கிறிஸ்டின் சாட்சியமளிக்கையில்: இறந்தவர்களில் 29பேர் குருநகரைச் சேர்ந்த ஒரே சமூகத்தவர்களென்றும் ஒருவர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவரென்றும் கூறினர்.

பலியானவர்கள் கிடந்த படகு கரையிலிருந்து 50 யார் தூரத்தில் நின்றதென்றும் கரையிலுள்ள ஆட்களின் உதவியுடன் சடலங்களை படகில் குருநகருக்கு ஏற்றிவந்ததாகவும் கூறினர்.

விசாரணை இம்மாதம் 18ம் திகதி புதன்கிழமை காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## பண்ணை மலேரியா தடுப்பு அலுவலகம் இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

பண்ணையிலுள்ள மலேரியா தடுப்பு இயக்கத்தின் யாழ். பிரதேச அலுவலகக்கட்டிடம், 'ஷெல்' தாக்குதல்களினல் சேதமடைந்ததை அடுத்து மேற்படி அலுவலகம் யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள தனியார் கட்டிடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இதேவேளை அவசிய மலேரியா இரத்த பரிசோதனைகள் தற்காலிகமாக யாழ். அரசினர் வைத்தியசாலையின் ஆய்வுகூடப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி டாக்டர் கே. சிவகுரு இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உபயோகிப்பதற்காக கொழும்பிலிருந்து யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க அலுவலகத்திற்கு புகையிரத மூலம் அனுப்பி வைக்கப்பட்ட 1120 பெட்டிகளைக் கொண்ட சுமார் மூவாயிரத்து நூறு கிலோ நிறையுள்ள மலத்தியன் இங்கு வந்து சேரவில்லை என்றும், இந்த மலத்தியன் அனுராதபுரத்தில் தேங்கிக் கிடப்பதாகவும், லொறி போக்குவரத்து தடைப்பட்டதால் இவற்றை இங்கு கொண்டுவர முடியாது இருப்பதாகவும்டாக்டர் சிவகுரு மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க டொலரை கடத்த முயன்ற இருவர் கைது

(கொழும்பு)

இருபத்தொரு இலட்சத்து எண்பதினயிரம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களையும், பிரயாண காசோலைகளையும் கடத்திச்செல்லமுயன்ற இருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தன்னை வர்த்தகர் என அடையாளம் காட்டிக்கொண்ட ஒருநபர் 'சூட்கேஸ்' பெட்டியில் டொலர் நோட்டுக்களை மடித்துவைத்திருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

எயர் லங்கா ஊழியர் என தன்னை அறிமுகப்படுத்திய இன்னுெருவர் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் ரூபாபெறுமதியான அமெரிக்க மற்றும் சிங்கப்பூர் டொலர்களையும் தமது பாதணியில் மறைத்து வைத்துக் கடத்த முற்பட்ட போதுகைதுசெய்யப்பட்டார். [து]


நகரின் மத்தியில் சகல வசதிகளுடன் புதிய நிர்வாகத்தில், சீனநாட்டு உணவு தயாரிப்பு நிபுணரின் மேற்பார்வையில் இயங்குகிறது

ஹொட்டல் ஞானம்ஸ், யாழ்ப்பாணம்.

★ வசதியான குளிரூட்டப்பட்ட அல்லது சாதாரண வசதிகொண்ட அறைகள் ★ மனோரம்மிய சூழலில், இயற்கையின் வனப்பை ரசித்து மது அருந்தும் "காப்றி-பார்" — "பியர் காடின்" ★ வகைவகையான சீனநாட்டு உணவுவகைகள் அத்தனையும் எத்தனைசுவை

HOTEL GNANAM'S - JAFFNA

Phone: 22082, 23067

புதிய நிர்வாகத்தில், சீனநாட்டு உணவு தயாரிப்பாளரின் மேற்பார்வையில், தினசரி காலை 9-30 மணிமுதல் இரவு 11-30 மணிவரை சேவையாற்றுகிறது ஹோட்டல் ஞானம்ஸ்.

ஹோட்டல் ஞானம்ஸ் நிறுவன புதியநிர்வாகிகளையும், அங்கு பணிபுரியும் ஊழியர்களையும்,

சகல நிறுவனங்களும் வாழ்த்துகின்றன

★ ஞானம்ஸ் ஸ்ருடியோ,
301, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

★ முருகன் றேடர்ஸ்,
21, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஆர். ஜீ. ஸ்ரோர்ஸ்,
மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

★ நியூவிக்ரேஸ் ஓடியோ கிளப்,
23, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

★ றிநோபா ரேட் சென்ரர்,
42, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்மாணம்.

★ வேலுப்பிள்ளை அன் சன்ஸ்,
(மதுபான விற்பனை நிலையம்)
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ சண்முகா ஏஜென்சி,
63, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ சரஸ்வதி ஸ்ரோர்ஸ்,
55, பெரியகடை, யாழ்ப்பாணம்.

★ விஜிதா மோட்டர்ஸ்,
43, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



மேலேயுள்ள படத்தில் காணப்படுவது சீனநாட்டு உணவு தயாரிப்பு நிபுணர் திரு. சினோசெப் (SINO CHEP) நிர்வாகஸ்தருடன் காணப்படுகிறார்.

வாடிக்கையாளர்களின் நலன் கருதி சீன நிபுணர் யாழ்ப்பாணத்திலே தங்கி சுவையான உணவு வகைகளை வழங்கி வருகிறார். BEER GARDEN உங்களை மெய்மறக்கவைக்கும்.

★ ஐவன் பெயின்ற் ஹவுஸ்,
மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஐடியல் ஏஜென்சி,
267, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ லிங் பார்மசி,
16, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்,

★ யாழ். ஏஜென்சி,
27, மேல்மாடி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

★ ஞானம்ஸ் ரேடர்ஸ்,
251, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

★ இந்திரா ஜுவலறிஸ்,
185 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஆர்த்தி ஜுவலர்ஸ் (Pvt Ltd.)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ சுப்பையா அன் கோ,
41, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

★ கோல்டன் செறமிக்ஸ்,
2D, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச. ச. நிலையங்கள்

# வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும்

[புலோலி]

''சனசமூக நிலையங்கள் தத் தமது பகுதி மக்களின் அபிவி ருத்திக்கான பல்வேறு துறைக ளிலும் ஈடுபட்டு மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும். கிரா மங்களில் வாழும் மக்கள் தமது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழியில் செலவிட்டு உயர் வடைவதற்கு சனசமூக நிலையங் கள் சிறந்த சாதனங்களாகத் திகழ்கின்றன.''

இவ்வாறு யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை கட்டை வேலி உப அலுவலகப் பகுதி சனசமூக நிலையங்களின் ஒன்றி யத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக அபிவிரு த்தி உத்தியோகத்தர் திரு. கே. இராமச்சந்திரன் கூறினார்.

அல்வாய் சின்னத்தம்பி வித் தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியதாவது: ''சனசமூகநிலை யங்கள் சமூக சேவை முயற்சி கள், கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத் துறை அபிவி ருத்தி நடவடிக்கைகள், சிரம தான முயற்சிகள், முதலு தவி மருத்துவ சேவைகள், தொழில் நுட்பப் பயிற்சிகள், சமய நிகழ்ச்சிகள், விவசாய அபிவிருத்தி போன்ற முக்கிய பணிகளில் ஈடுபட வேண்டும். சனசமூக நிலையங்கள்சிறப்பாக இயங்கினால் கிராமிய அபிவிரு த்திமேம்பாடு உயர்வடையும்.

சனசமூக நிலைய ஒன்றியத் தலைவராக ம. கணேசலிங்க மும், செயலாளராகச. செந்து ரராஜாவும், பொருளாளராக பொ. சத்தியமூர்த்தியும் செயற்குழு உறுப்பினர்கள் 10 பேரும் தெரிவாகினர்.

# ''ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் சுத்தம் ஆரம்பமாக வேண்டும்''

[மானிப்பாய்]

'சுத்தம் ஒவ்வொரு வீட்டி லிருந்தும் தொடங்க வேண் டும். அப்போதுதான் ஊரும் நகரமும் சுத்தமாக மாசற்ற சுற்றுடலுள்ள இடமாக மாறும். இது விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே மாணவர் கள் மத்தியில் உகந்த கருத் துக்கள் ஏற்றவகையில் நன்கு பரப்பப்பட வேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட் டைப் பகுதி லயன்ஸ் கழகத் தலைவரும் யாழ்ப்பாணக் கல் லூரியின் முன்னைநாள் ஆசிரிய ரும் கனிஷ்டபிரிவு மேபார்ற் வையாளருமான திரு டபிள்யூ என். தேவகடாட்சம் ஆனைக் கோட்டை றோமன் கத்தோ லிக்க தமிழ்க் கலவன் பாட சாலையில் சுற்றுடல் தினத்தை யொட்டி நடைபெற்ற கூட் டத்தில் சிறப்புரை நிகழ்த்து கையில் கூறினார்.

இப்பாடசாலையின் மாண வர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தேவகடாட்சம் மேலும் பேசுகையில்

''யாழ்ப்பாணத்தில் சுகா தார விடுமுறைகள் சரியாக நடைமுறைப் படுத்தப்பட் டதால் கிணற்றுநீர் அசுத்த நீராகிக்கொண்டிருக்கின்றது'' என்றார்.

கல்லூரி அதிபர் தமது தலை மையுரையில் மாணவர்கள் வீட்டிலும், வெளியிலும் இயன் றளவு சுத்தத்தை அனுசரித்து நடக்கவேண்டும் என்றார்.

# மாணவனின் நேர்மைக்குப் பாராட்டு

[பூநகரி]

முழங்காவில் அரசினர் பாட சாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போதுவிழாவைக் கண்டுகளிக்க வந்த ஓர் பெண்ணின் ரூபா 2000/- பெறுமதியான சங்கிலி தொலைந்துவிட்டது. பொரு ளுக்குரியவர்கள் தேடியும் கிடைக்கவில்லை. இரண்டாவது தினம் அப்பாடசாலையைச் சேர்ந்த மாணவன் செல்வன் சி. சற்குணராசா அப்பொரு ளைக் கண்டெடுத்து பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தார். பாடசாலை அதிபரும், பொரு ளுக்குரியவரும் அம்மாணவ னின் நேர்மையைப் பாராட் டியதோடு சன்மானமும் வழங் கினர்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி- 2 (16 - 4 - 1986)
கிழமை- திங்கள்
திதி- நவமி மு. இ. வரை
நக்ஷத்திரம்- உத்தரம்
காலை 6.27 ன் மேல் அத்தம்

மேடம்: கொடுக்கல் வாங் கல் மூலம் பிணக்குகள் தோன்றலாம். இன்று எவ் விடயத்திலும் அவதானம் வேண்டும். உடல் நலத்தைப் பேணவும்.

இடபம்: பொது விவகாரங் களில் தலையிட நேரிடும் பெரியவர் ஒருவருடைய உப தேசம் வழிகாட்டியாக அமை யும். பிதாவழிப் பெரு மையுமுண்டு.

மிதுனம்: கடமையாற்று மிடத்தில் கருத்து மோதல் கள் தோன்றும், மேலதிகாரி களுடன் பகைத்துக் கொள்ளா தீர். விழிப்புடன் செயலாற்ற வும்.

கடகம்: மூத்த சகோதர சுகக் குறைவும். பண முடக்க மும் உண்டு. இன்று போக்கு வரத்தில் அவதானம் வேண் டும். வரவுமுண்டு.

சிங்கம்: அன்னியநபர் ஒருவ ரால் ஏமாற்றமடையநேரும். இன்று எவ்விடயத்திலும் நிதானம் தேவை. தேக நிலை யையும் கவனிக்கவும்.

கன்னி: உள்ளக் குமுறலுக்கு இடமுண்டு. உடல் நலமும் பாதிக்கப்படலாம். உணவு விடயத்திலும் சுகாதாரம் வேண்டும்.

துலாம்: நண்பர்கள் மூலம் நச்சரிப்புக்கு இடமுண்டு நம் பிக்கை மோசடியும் நடை பெறலாம் நாவடக்கம் நன்று.

விருச்சிகம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். சகோதரர் வழியாலும் சஞ் சலம் தோன்றலாம். பயணத் திற்கும் இடமுண்டு.

தனுசு- அன்னை வழியால் ஆத்திரப்படநேரிடும் பொருள் துறைகளிலும் முடக்கம் ஏற் படும். வாகனச்சாரதிகளுக்கு தானம் வேண்டும்.

மகரம்: செய்காரியங்களில் மந்தநிலை தென்படும்- இன சனப் பகையுடன் புத்திர சுகக்குறைவிற்கும் இடமுண்டு

கும்பம்; தேவ தண்டனைக்கு ஆளாக நேரலாம். ஆலய வழி பாட்டில் ஆர்வம் காட்டவும் அடுத்துக் கெடுப்பதற்குச்சிலர் முனைவர்.

மீனம்: களஸ்திரவழியால் கவலைகள் தீரும். காதலர் வாழ் வில் மனவிரக்திக்கும் இட முண்டு. இன்று அமைதியே நன்று.

திருமலை ரவீந்திரன்

# தமிழ் மகளிர் அவை அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''பாதிக்கப்பட்டோர், இடம் பெயர்ந்தோர் விடயத்தில் சகல வெகுஜன அமைப்புக் களும், சமூக சேவை ஸ்தாப னங்களும் ஒன்றிணைந்து பரவ லாக உதவி செய்யவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து, ''புனர்வாழ்வு உதவி நிறுவ னங்களின் ஒன்றியத்தை'' அமைப்பதில் அமரர் விசுவ லிங்கம் ஈடுபட்டபோது நாமும் அதில் அங்கம் வகித்தமையி னால் அவரின் சேவை மனப் பான்மையைக் கண்டு வியப் படைந்தோம்.''

இவ்வாறு அகதிகள் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் அம ரர் திரு. கா. விசுவலிங்கத் தின் மறைவு குறித்து வெளி யிட்டுள்ள இரங்கற் செய்தியில் தமிழ் மகளிர் அவையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-க)

# நீதி நியாயத்தை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வது: பாராளுமன்றத்திற்குள் ளும் வெளியிலும் அடக்கப் பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக் காக போராடினார். குறிப் பாக மலையக தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ் வுக்காகஅரும்பணியாற்றினார்.

கம்யூனிஸ்ட் கட்சி யாழ், மாவட்ட அமைப்பாளர் திரு எஸ். விஜயானந்தன் பேசு கையில் ''யூ, என். பி, அர சாங்கத்திடம் எதுவித நீதி யையும் நியாயத்தையும் எதிர் பார்க்கவே முடியாது, இந்த அரசை இல்லாமற் செய்வதன் மூலம்தான் ஏதா வது விமோசனத்தை எதிர் பார்க்க முடியும் எந்த போராட்டமும் மக்கள் போராட்டமாக அமைய வேண்டும், ஆகவே தென்னி லங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடுவது இன்றைய கால கட்டத்தில் அத்தியாவசிய மாகி விட்டது'' என்றார்.

திரு. ரி. என். பஞ்சாட்ச ரம் பேசுகையில் தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பிரதிபலித்து நம்பிக்கையுடன் செயல்பட்ட குரல் ஓய்ந்து விட்டமை தமிழினத்திற்கு பேரிழப்பாகும்என்றார்.

திரு. இ. முருகையன் பண் டிதர், நீ, சி. முருகேசு, திரு சு. ஆள்வாப்பிள்ளை, திரு. எஸ், கே, சந்ரா திரு. எஸ். வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

# தேசிய வீரர் தினவிழா

(உடுவில்)

''அரசியல் துறையை விடுத்து நாட்டின் சுதந்திரம், பொருளாதாரம், கல்வி, கலா சாரதுறைகளுக்காக பெரிதும் சேவையாற்றிய பெரியோர் களையும் தேசிய வீரர்களாக நினைவில்கொள்வது அவசியம்'' நவாலி மகா வித்தியாலயத் தில் நடைபெற்ற தேசிய வீரர் தினவிழாவில் உரை யாற்றிய சங்கானை பட்டின சபை நூல் நிலையப் பொறுப் பாளர் திரு. ஜோன் செல்வ ராசா இவ்வாறு கூறினார்.

இவ் விழாவுக்கு மகா வித்தி யாலய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி தலைமை வகித்தார்.

நவாலி சிரேஷ்ட தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி மரியநாயகி மரிய தாசும், பாடசாலை மாணவர் களும் தேசிய வீரர்கள் பற்றி உரை நிகழ்த்தினர்.

பாடசாலை உப அதிபர் திரு. பொ. தி. சம்பந்தபிள்ளை நன்றி கூறினார். (க)

## கடற்றொழிலாளர் படுகொலை:

# வெகுஜன இயக்கம் பலத்தகண்டனம்

[யாழ்ப்பாணம்]

''மண்டைதீவுக் கடலில் முப்பது மீனவர்கள் அண்மை யில் அரசபடையினரால் சுட் டுக்கொல்லப்பட்டசெயல் மனி தத்தன்மையற்ற கொடூரச் செயலாகும். தமது நாளாந்த ஜீவனோபாயத்திற்காக தொழில் செய்வதற்கென்று கடலில் சென்ற மீனவர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்ட செயலை மனித உரிமைகளுக் கான வெகுஜன இயக்கம் மிக வும் வன்மையாகக் கண்டிக் கின்றது.''

இவ்வாறு 30 குருநகர் மீன வரின் கொலை பற்றி மனித உரிமைகளிற்கான வெகுஜன இயக்கத்தின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் சோ. தேவராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

அவ்வறிக்கையில் மேலும்: ''நாட்டில்மோசமடைந்துள்ள இனப்பிரச்னை ஓர் அரசியல் பிரச்னையாகும். இதற்கு அரசி யல் தீர்வே அடிப்படையான தாகும். இதைவிடுத்து இராணு வத் தீர்வோ அன்றி பழிக்குப் பழியாக ஒன்றுமறியாத மக்க ளைப் படுகொலைக்குள்ளாக்கு வதோ ஏற்றுக்கொள்ளக் கூடி யதல்ல''.

மேலும் தமது குடும்பத்த வர்களையும் உறவினர்களையும், அயலவர்களையும் முற்றிலும் எதிர்பாராத நிலையில் இழந்து தவிக்கும் -குருநகர் மக்களுக்கு மனித உரிமைகளுக்கான வெகு ஜன இயக்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. [க]

# சேக்கிழார் குருபூசையில் ....

(யாழ்ப்பாணம்)

'பெரியபுராணம் நமது வாழ்க்கையில்பெரிதும் கடைப் பிடிக்க வேண்டிய அரும் பெரும் சொத்து, அதனை அருளே வடிவான சேக்கிழார் பெருமான் நமக்குதந்துள்ளார் கள்'

இவ்வாறு அகில இலங்கைத் திருமுறைமன்றம் நல்லூர் பண்டாரக்குளம் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 11 ம் திகதி புதன் கிழமை மாலை நடைபெற்ற சேக்கிழார் குருபூசை விழா வில் உரையாற்றிய திரு. ம. நமசிவாயதேசிகர் குறிப்பிட் டார்கள். இவ்விழா க்ஷ மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

''சமய குரவர்கள் அருளிச் செய்த திருமுறைகளில் பன்னிரண்டாந் திருமுறை யாக வைத்தெண்ணப்படுவ தும் சந்தான குரவருள் ஒரு வரும் சிந்தாந்த அட்டகத்தி னைச் செய்தருளியவரும் தில்லை மூவாயிரவர் வழியில் வந்த வருமான உமாபதி சிவாசாரி யார் சுவாமிகள் பெரிதும் போற்றுவதும் பெரியபுராணத் தின் பெருமைக்கு போதிய சான்றாகும்'' எனறார்.

மேலும் விழாவில் சேக் கிழார் புராணபடனம் திரு முறை இசை அரங்கு ஆகியன வும் இடம்பெற்றன. [ப]

# பொங்கல் விழா

(வேலணை)

நயினாதீவு தில்லை வெளி ஸ்ரீ பிடாரி அம்மன் ஆலய வரு டாந்த பொங்கல் வேள்வி விழா சிறப்பாக நடந்தது. [க]


பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்

25-ம் திகதி எமது முகவர் உங்களைக் கூட்டிச்செல்வார்.

கனடா லிபியா குவைத் சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

சிங்கப்பூர் (பணிப்பெண்கள்)

அத்துடன் பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரேலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(C 2893)

லிடோ
காலை 1 0-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Bygerald seymour நடித்த
Harrys Game
அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு பயங்கரவாதிகளை அழிக்க முயற்சிக்கும் பயங் கரபோர்நுட்பங்களை கண்டு களியுங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தோர்க்கு மட்டும்)
10-30, 2-30, 4-30, 6-45
[ஒறிஜினல் பிரதி]
19866ம் ஆண்டு வெளியீடு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 16-6-86

# "சிறிமாவோமீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்"

## ஜனதிபதி கூறுகிறர்

[கொழும்பு]

"இனப்பிரச்னையை மையமாகக் கொண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவாராளுல் அவர்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொது வைபவமொன்றிலேயே ஜனதிபதி, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மீது இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"தமிழக அரசும் இந்திய மத்திய அரசும் இலங்கையில் நிகழும் தீவிரவாதநடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன" என்று குற்றஞ்சாட்டிய ஜனதிபதி "தமிழ்மக்களை அழித்து இப்பிரச்னைக்கு முடிவுகாணும் நடவடிக்கையில் ஈடுபடுவோமாகில் வெளிநாட்டு உதவிகளை முற்று முழுதாக இழக்கும் நிலை நேரிடும்" என்றும் அச்சம் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் சிறுபான்மை மக்களை பெரும்பான்மையினர் முடித்துக்கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது 1983ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் உலக நாடுகளில் பரவியுள்ளது" என்றும் ஜனதிபதி அங்கு சுட்டிக் காட்டினர். (ரா)

## பண்டத்தரிப்பில் 'கற்பகம்'

[பண்டத்தரிப்பு]

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையமொன்று பண்டத்தரிப்பு நவீனசந்தைக் கட்டிடத்தில் திறப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வவனியாவுக்கு மேலதிக பஸ்கள்

[வவனியா]

வவனியாவிற்கு மேலதிக இ. போ. ச. பஸ்களை தருவிக்க வவனியா இணைப்பதிகாரி, போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார் என வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

வவனியா டிப்போவிற்கு போதிய பஸ்கள் இல்லாததினுல் சிறந்த சேவையினை பிரயாணிகளுக்கு ஆற்ற முடியாது உள்ளதாக டிப்போ அதிகாரி ஒருவர் கூறினர்.

## இலங்கையில் 30 நிமிடத்திற்கு ஒரு விபத்து!

[கொழும்பு]

இலங்கையில் சராசரியாக முப்பது நிமிடங்களுக்கொரு வீதி விபத்து நடப்பதாக பொலிஸ் போக்குவரத்து அத்தியட்சகர் திரு. பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார்.

75 ம் ஆண்டிலிருந்து 83 ம் ஆண்டு வரை சுமார் 10 லட்சம் விபத்துகள் நடந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [செ]

## யாழ். குடா---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விலக்கு அளிக்கும் வகையில் குடாநாட்டைச் சூழவுள்ள கடல்நீரேரிகளில் மீன்பிடிப்பதற்கு அரசாங்கத்தினுல் அனுமதியளிக்கப்பட்டிருந்தது

இதனையடுத்து 'கரைவலை' மூலம் கடல் கரையோரங்களிலிருந்து 100 யாருக்குட்பட்ட தூரத்திலும் மற்றும் கடல்நீரேரிகளிலும் வடபகுதி மீனவர்களால் கடற்றொழில் மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் கடந்த 11 ந் திகதி குருநகர் மீனவர்கள்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து இந்த கடல் நீரேரி மீன்பிடிக்கும் மறு தினம் உடனடியாகப் தடைபோடப்பட்டது. இதனையடுத்து வடபகுதி கடற்றொழில் முற்ருக ஸ்தம்பித்துள்ளது.

கடல்நீரேரித் தடைச் சட்டத்தின்மூலம் பெருமளவு வருவாய் பெற்றுத் தந்த இறல், கடல் அட்டை பிடிக்கும் தொழிலும் தொடர்ந்து நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் ஸ்ரீலங்காவுக்கு குறிப்பாக வடபகுதி மீனவசமூகத்துக்குகிடைத்துவந்த அந்நியச்செலாவணி வருமானம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடல் நீரேரிச் சட்டத்திஞல் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியைச் சேர்ந்த 35 ஆயிரம் மீனவக்குடும்பங்களும் சுமார் ஒன்றரை லட்சம் மீனவ மக்களை உள்ளடக்கியுள்ளதென்று குருநகர் கடற்றொழில்சங்க செயலாளர் திரு. சி. தவரட்ணம் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் இம் மீனவமக்களுக்குவடபகுதியின்ஏனைய மக்களும் பொது ஸ்தாபனங்களும் உதவமுன்வரவேண்டுமெனவும் கேட்டுள்ளார். (கி)

## கிளிநொச்சி,--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சாரதியின் விடுதிக் கட்டிடம் சேதத்திற்குள்ளாகியது.

இவரது மூன்று ஆடுகள் பலியாகின. இக்குண்டு வீச்சைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் இருந்துவந்த சில தாதிமாரும் டாக்டர்களும் ஊழியரும் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறினர்கள்.

கனகபுரத்தில் சில வீடுகளும், ஜெயந்திநகரில் பாடசாலை ஒன்றும் இரத்தினபுரம் பகுதியில் வாழைதோட்டங்களும் சேதமாகின.

தொடர்ந்து இராணுவமுகாமில் இருந்து இரவுபகலாக ஷெல் தாக்குதல், பீரங்கித்தாக்குதல் இடம்பெற்று வருகிறது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் இருந்து மேலும் பலர் வெளியேறிய வண்ணம் உள்ளனர். இவர்கள் அனைவரும்உடமைகளைக் கைவிட்ட நிலையிலேயே வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

# புற்றுநோய் விடுதி அமைக்க உதவி கோரப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் புற்றுநோய் விடுதி கட்டுவதற்குரிய அடிக்கல் தெல்லிப்பழையில் இம்மாதம் 12 ம் திகதி வியாழக்கிழமை காலை வடமாகாண புற்று நோய்ச்சங்கத்தின் உபதலைவர் திரு க. தம்பிராசாவினுல் அடிக்கல் நாட்டப்பட்டது தெல்லிப்பழையில் நோய் விடுதி கட்டுவதற்கு 14 பரப்பு காணியை ஊரெழுவைச் சேர்ந்த திரு. தம்பிராசா வழங்கியிருந்தார். இந்நிகழ்ச்சியில் தம்பிராசா தம்பதிகள், சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி ஜெகநாதன், சத்திர சிகிச்சை நிபுணர் கிருஷ்ணராசா, வைத்திய கலாநிதிகள் கதிரவேற்பிள்ளை, தெய்வேந்திரன், பத்மநாதன் உட்படபலர் கலந்து கொண்டனர்.

மேற்படி விடுதியின் கட்டிட வேலைகள் பூர்த்தியடைய இன்னும் 15 லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும், இதற்கு மக்கள் உதவி செய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் 4 ஆம்குறுக்குத்தெருவிலுள்ள மேற்படி சங்கத்தின் தனுதிகாரியின் விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்காவில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

The U. S. Education Foundation
American centre annex 36
Sir Ernest de Silva Mawatha
Colombo-7

இதேபோன்று 1987/88 கிழக்கு மேற்கு மத்தியநிலைய பட்டப் படிப்பு புலமைப்பரிசுகளையும் அமெரிக்க கல்வி பவுண்டேஷன் அறிவித்துள்ளது.

ஹவாயில் மஹானலுலுவிலுள்ள கிழக்கு மேற்கு நிலையத்தில் இப் பயிற்சியை மேற்கொள்ளலாம். பி. ஏ. பி. எஸ். ஸி. பட்டம்பெற்றுள்ள 37 வயதுக்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஆங்கிலமொழியில் நன்கு தேர்ச்சிபெற்றிருத்தல் அவசியம்.

மேற்குறித்த முகவரியில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

## வ. பி. போ. ச. சேவை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்று வ. பி. போ. ச. பஸ் சேவை முற்ருகஸ்தம்பித்தது.

கிளிநொச்சி பகுதியில், பதற்றநிலைகாரணமாக, மன்னர், வவனியா, முல்லைத்தீவு போன்ற தூரஇடங்களுக்கான பஸ் சேவை கூட நடைபெறவில்லை.

மினிபஸ்கள்மட்டுமே நேற்று சேவையில் ஈடுபட்டன. [க]

## 3 ஊர்காவல் படையினர் கொலை

[வவனியா]

வவனியாவிலுள்ள உலுக்குளம் என்ற பகுதியில் மூன்று ஊர்காவல் படையினரை ஆயுதம் தாங்கிய பத்து போராளிகள் நேற்று அதிகாலை சுட்டுக் கொன்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி ஊர்காவல் படையினரைத் தாமே சுட்டுக் கொன்றதாகவும், அவர்களிடமிருந்த 'ஷொட்கண்' தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். (ஜ)

## கடல்நீர்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்.குடாநாட்டுக் கடலேரிகளில் மீன்டிப்பது தடைசெய்யப் பட்டது தொடர்பாக ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவினர், யாழ்.அரசாங்க அதிபரைச் சந்தித்து போக்குவரத்துக் கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

இதனையடுத்தே அரசாங்க அதிபர், இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் மூலம், அராலித்துறை நீர்வழிப் போக்குக்கு எதுவித தடையுமிருக்காதென வடபகுதி பாதுகாப்புப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [வா]

## 20, 21ம் திகதி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்ததும் தெரிந்ததே.

இதுசம்பந்தமாக அடகு வைத்தோர் சங்கம் மேலும் தெரிவிக்கையில்

ஏற்கனவே விநியோக நேரத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் போன்று இனிமேலும் நடைபெருதிருக்கும் வகையில் அங்கு செல்லும் வாடிக்கையாளர்கள் தாம் செல்லும் வாகனங்களை விநியோக நிலையத்துக்கு மிகத் தொலைவில் நிறுத்திவிட்டு நடந்து செல்லுமாறும் அச்சுவேலி வசாவிளான் பாதையூடாக பிரயாணத்தை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளது. இவ்விநியோகத்தை தொடர்ந்தே அடுத்தகிளைகளின் விநியோகம் நடைபெறும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (வா)

# மரண அறிவித்தல்

### பக்கிரிசாமி கோபாலகிருஷ்ணன்

பக்கிரிசாமி கோபாலகிருஷ்ணன் (நாதஸ்வரம்) 14-06-1986ல் காலமாகிவிட்டார். அன்னர் விசாலாட்சியின் அன்புக் கணவரும், சிவகுருநாதன் (இ.மி.சபை), கலாஈஸ்வரன் (Architectural Design Group, Mahawali Kandy), சிங்காரவடிவேல் (கனடா), வாசுகி ஆகியோரின் தந்தையும், கலைவாணி, இரஞ்சனி, இராதாகிருஷ்ணன் (வயலின்) ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (அளவெட்டி வடக்கு) நடைபெறும். இதை சகலரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: கோ. சிவகுருநாதன்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[C-2912]

### திருமதி நாகமுத்து கந்தையா

கரம்பனைச் சேர்ந்த திருமதி நாகமுத்து கந்தையா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற கந்தையாவின் மனைவியும் கொம்பனித்தெரு, நிர்மலாஸ் உரிமையாளர் பொன்னையா, கொம்பனித்தெரு வாகினி ஸ்ரோஸ், யாழ்ப்பாணம், வாகினி ரெக்ரெயில் உரிமையாளர் இரத்தினசபாவதி, திருமதி சந்திரவதன, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி கமலாம்பிகை பொன்னையா, திருமதி மகேஸ்வரி இரத்தினசபாவதி, திரு. சண்முகநாதன், [ஜேர்மனி], ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் 16 - 6 - 86, திங்கட்கிழமை [இன்று] மாலை 3 மணியளவில், கரம்பனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ந. பொன்னையா.

[C-2915)

### சின்னையா சரவணமுத்து
[Retired Post Master]

சுதுமலை மத்தியைச் சேர்ந்த சின்னையா சரவணமுத்து காலமானர். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சீனிவாசகம் சின்னையா [கொக்குவில்] அவர்களின் மூத்த மகனும், ஸ்ரீமதி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீநிவாசன் [இலங்கை வங்கி, கொழும்பு], ஸ்ரீரஞ்சன்[Canada, முன்னைநாள் ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி], ஸ்ரீதரன் (Abu-dhabi), சாரதாதேவி [U.K], ஸ்ரீதாசன், (Abu-dhabi) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசராசா [U. K], தவனேஸ்வரி, சிவதேவி, வையந்தி ஆகியோரின் அன்புமாமனுரும்; சுதர்சன். பிரஷாந், பிரதீபன், ரூகானி, கிரிஷாந், வைஷ்ணவி, கஜேந்திரன், வசீகரன் ஆகியோரின் ஆசைப்பேரனும், இராசமணி, கருணப்பிரகாசம் ஆகியோரின் சகோதரனும்; திருமதி அருட்பிரகாசம், காலஞ்சென்ற திருமதி நடராஜா, காலஞ்சென்ற சரவணமுத்து, திருமதி கருணப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும்; காலஞ்சென்ற அருட்பிரகாசம், நடராஜா (Retired Goods Agent C.G. R) ஆகியோரின் சகலனும், திருமதி இராசம்மாவின் அன்புப் பெருமகனும்; மலாயன் பென்சனியர் சுப்ரமணியம் (கைதடி) தர்மலிங்கம் (கொக்குவில்) ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை [16-6-86] காலை 10 - 00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

"ஸ்ரீமதி வாசா",
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

தகவல்: ச. ஸ்ரீநிவாசன்

[C 2907]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389.
24126

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org